**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 232 of 2015**

**Deposition of Witness P. W.7**

| | |
|---|---|
| **Name : ராஜகாளியப்பன்** | **Father/Husband's Name: கிருஷ்ணசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 16.11.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது பாலசமுத்திரத்தில் குடியிருக்கிறேன். ஓர்க் ஷாப்பில் வேலை செய்கிறேன். 16.02.2015 ம் தேதி காலை 08.00 மணிக்கு சம்பவயிடமான ஓம் சண்முகா தியேட்டர் அருகே நானும், எனது நண்பர் பிரபாகருடன் இருந்த போது ஒரு விபத்து சம்பந்தமாக போலீசார் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், எனது நண்பர் பிரபாகரனும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள 2 ம் கையொப்பம் என்னுடையது தான். பார்வைமகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

பார்வைமகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியும். பார்வைமகஜர் என் முன்னிலையில் தான் தயார் செய்யப்பட்டது. வரைபடம் என் முன்னிலையில் தான் தயார் செய்யப்பட்டது. வரைபடத்தில் எத்தனை கடைகள் குறிப்பிடப்பட்டிருந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. வரைபடத்தில் எத்தனை வீடுகள் குறிப்பிடப்பட்டிருந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. விபத்து நடந்ததாக சொல்லப்படும் ரோடு 50 அடிக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் ஓம் சண்முகா தியேட்டருக்கு நேர் எதிர்புறம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பாதசாரிகள் நடந்து செல்வதற்கான இடம் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி

பார்வைமகஜரில் காவல்நிலையத்தில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். போலீசார் விபத்து நடந்த இடத்தில் பொருட்கள் எதுவும் எடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2022.11.16 19:01:04 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 232 of 2015**

**Deposition of Witness P. W.8**

| | |
|---|---|
| **Name : முருகானந்தம்** | **Father/Husband's Name: தண்டபாணி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 16.11.2022**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பழனி போக்குவரத்து காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். பழனி நகர் காவல்நிலைய கு.எண்.170/2015, பிரிவுகள் 279, 37, 304(எ) இ.த.ச வழக்கில் இறந்து போன தண்டபாணி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அடையாளம் காட்டி பின்பு பிரேத பரிசோதனை முடித்து உறவினர் வசம் உடைமைகளையும், பிரேதத்தையும் ஒப்படைத்து காவல்நிலையம் வந்து அறிக்கை செய்தார். ஆய்வாளர் அவர்கள் இது சம்பந்தமாக விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

கடந்த 16.02.2015ம் ஆண்டு 13 மணிக்கு பழனி அரசு மருத்துவமனைக்கு பிரேத விசாரணைக்காக சென்றேன். பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் பெயர் ஞாபகம் இல்லை. பிரேத விசாரணை செய்த போது நான் உடன் இருந்தேன். எத்தனை மணிக்கு பிரேத பரிசோதனை செய்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. பிரேத பரிசோதனை செய்து முடிக்கப்பட்ட நேரம் எனக்கு ஞாபகம் இல்லை. 16.02.2015 அன்று காலை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி கடிதம் கொடுத்து விட்டு பிரேத பரிசோதனை நிறைவு பெறும் வரை நான் அங்கு தான் இருந்தேன்.

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2022.11.16 19:01:16 +0530

நீதித்துறை நடுவர்,

பழனி